






## மெட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனத்தின் ஈகா ஹைட்ஸ் வீடமைப்புத் திட்டம்:

# மக்களிடையே அமோக வரவேற்பு

(துர்க்கா)

சிரம்பான், ஆக.30- பிரபல மேம்பாட்டு நிறுவனமான மெட்ரிக்ஸ் கொன்செப்ட்ஸ் ஹோல்டிங்ஸ் கடந்த ஆண்டு இறுதியில் நெகிரி செம்பிலானில் மேற்கொண்ட ஈகா ஹைட்ஸ் வீடமைப்புத் திட்டம் வீடுகளை வாங்கும் பயனீட்டாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக அதன் விற்பனை பிரிவின் தலைமை அதிகாரி லிம் கோக் யீ தெரிவித்தார்,

மொத்தம்10 வளாகங்களை உள்ளடக்கிய இந்த ஈகா ஹைட்ஸ் வீடமைப்பு திட்டம் மக்களிடமிருந்து நிறைவான ஆதரவை பெறுவதில் வெற்றி கண்டுள்ளது என அவர் கூறினார்.

குறிப்பாக, ஈகா 3 மற்றும் ஈகா 10 குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 430 வரிசை வீடுகளும் கடந்த 2023 செப்டம்பரில் அறிமுகம் செய்யப்பட்ட உடனேயே விற்றுத் தீர்ந்ததாக அவர் சொன்னார்.

பண்டார் ஸ்ரீ செண்டயானில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக வீடமைப்பில் எங்களின் வெற்றிகரமான வளர்ச்சி எங்கள் மீது ஆழமான நம்பிக்கையை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.



தரத்தையும் புத்தாக்கத்தையும் எதிர்பார்க்கும் மக்களுக்கு அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வீடுகளை ஈகா ஹைட்ஸ் வழங்குகிறது. அதற்கு எங்கள் சேவையின் அர்ப்பணிப்பு சான்று என்றார் அவர்.

இதற்கிடையே, தங்கள் முதல் வீட்டை வாங்குபவர்களின் கனவை நனவாக்கும் வகையில் ஈகா ஹைட்ஸ் வீடுகள் சிறந்த தேர்வாக அமையும் என மெட்ரிக்ஸ் கொன்செப்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சாய் கெங் வை கூறினார்.

முதல் முறையாக வீடு வாங்க நினைப்பவர்களுக்கு முதலில் ஒரு நல்ல இடமாக இது அமைகின்றது.

மேலும் சிரம்பான், லாபு, பண்டார் என்ஸ்டெக் மற்றும் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் (KLIA) அமைந்துள்ள மையப்பகுதியில் இந்த வீடமைப்புத் திட்டம் உருவாகியுள்ளது.

நெகிரி செம்பிலானில் மலேசிய தூரநோக்கு பள்ளத்தாக்கு அல்லது மலேசியன் விஷன் வேலி 2.0 எனும் புதிய மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும் நிலையில், நிச்சயமாக ஈகா ஹைட்ஸ் வீடமைப்பு பகுதியின் மவுசை அதிகரிக்கும்.

சுமார் 371.79 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இவ்வீடமைப்புத் திட்டத்தில் 3,620 அழகான வீடுகள், 25 வணிகக் கடைகள் உள்ளன.

இதன் மொத்த மதிப்பு சுமார் 50 கோடி வெள்ளி யாகும்.

இன்னும் ஏழு முதல் எட்டு ஆண்டுகளில் இத்திட்டம் முழுமையாக நிறைவடை யும் என எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.